DEPOSITION OF WITNESS

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்**

**CC.No.231/2025**

Prosecution Witness **PW.9**

Court

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | சோமசுந்தரம் | கிராமம் : | |
| தந்தை பெயர் : | சுப்பிரமணி | வட்டம் : | |
| மதம் : | | தொழில் : | |
| ஜாதி : | | வயது : | 45 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 25.02.2026

எதிரி ஆஜரில்லை.. சட்டப்பிரிவு 355 BNSS படி மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது. வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

1. நான் தற்போது மயிலாடுதுரை மாவட்டம் மணல்மேடு காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணி புரிந்து வருகிறேன். நான் கடந்த 2020ம் வருடம் லாலாப்பேட்டை காவல் நிலையத்தில காவல் ஆய்வாளராக பணி புரிந்த போது லாலாப்பேட்டை காவல் நிலையக்குற்ற எண். 329/2020 இதச பிரிவுகள் 279, 337 , 304(ஏ) ன்வழக்கில் எனக்கு முன்பாக புலன் விசாரணை செய்த காவல் ஆய்வாளர்கள் திரு.செந்தில்குமார், திரு.பிச்சையா ஆகியோர்கள் செய்திருந்தார்கள். காவல் ஆய்வாளர் திரு.பிச்சையா அவர்கள் விசாரணையை வாக்குமூலங்களின் ஆவணங்களின் படி அவருக்காகவும் நான் சாட்சியம் அளிக்கிறேன்.

2. திரு.பிச்சையா அவர்கள் 18.06.2020 அன்று இவ்வழக்கின் எதிரி தினேஷ் என்பவரை லாலாப்பேட்டை காவல் நிலையம் அருகில் காரணம் கூறி கைது செய்து பின்னர் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தார். பின்னர் 07.07.2020 அன்று இவ்வழக்கின் சாட்சிகள் சித்ரா, நோகிதன் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் இவ்வழக்கின் விபத்துக்குள்ளான வாகனமான TN 48AP 3525 என்ற வாகனத்தை ஆய்வு செய்து ஆய்வறிக்கை

வழங்கிய மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.கோவிந்தராஜ் அவர்களையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

3. இவ்வழக்கின் இறந்து போன நபர்களான பாலமுருகன் மற்றும் தர்சன் ஆகியோரை பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் விஜயசுரேந்தர் விசாரித்து பிரேத பரிசோதனை அறிக்கை பெற்றார். **(பாலமுருகன் மற்றும் தர்சன் அகியோரின பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.6, அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** மேற்படி வழக்கினை நான் கடந்த 04.08.2020 அன்று எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு வழக்குக்கோப்பினை பார்வையிட்டு ஏற்கனவே விசாரித்த சாட்சிகளை விசாரித்து அவர்கள் புதிதாக எந்த சங்கதியும் சொல்லாததால் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை.

4. பின்னர் சாட்சிகள் ராணி, லாலாப்பேட்டை காவல் நிலைய பெண் காவலர் கலாராணி, தலைமைக்காவலர் திரு.சிவக்குமார் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேலும் இவ்வழக்கில் காயம் பட்ட சித்ரா மற்றும் நோகிதன் ஆகீயோர்களுக்கு சிகிச்சை அளித்து காயச்சான்று வழங்கிய மருத்துவர் செந்தில்குமார் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். காயச்சான்றிதழ்கள் மற்றும் விபத்து பதிவேடுகள் பெற்றேன்.

5. **(சித்ரா அவர்களின் விபத்து பதிவேடு அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.) (நோகிதன் அவர்களின் விபத்து பதிவேடு அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.) (சித்ரா அவர்களின் காயச்சான்றிதழ் அ.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.) (நோகிதன் அவர்களின் காயச்சான்றிதழ் அ.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.) (தர்சன் அவர்களின் விபத்து பதிவேடு அ.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது.) (பாலமுருகன் அவர்களின் விபத்து பதிவேடு அ.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது.) (தர்சன் அவர்களின் பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.14 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

6. மருத்துவர், சித்ரா என்பவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்றும் நோகிதம் எனபவருக்கு எற்பட்ட காயம் சாதாரண காயம் என்று சான்றிதழ் வழங்கினார். பின்னர் நான் 20.08.2020 அன்று இவ்வழக்கில் விபத்துக்குள்ளான இன்னொரு வாகனமான TN 49 AX 6196 என்ற வாகனத்தை ஆய்வு செய்து ஆய்வறிக்கை வழங்கிய மோட்டார் வாகன ஆய்வாளர் செந்தில்

அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். உதவி ஆய்வாளர் தங்கவேல் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். **(TN 49 AX 6196 என்ற வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.14 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** TN 48 AP 3525 என்ற வாகனத்தின் வாகன ஆய்வறிக்கை பெற்றேன். **(TN 48 AP 3525 என்ற வாகனத்தின் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.15 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

**7.** விசாரணைக்கு பின்னர் இவ்வழக்கின் சட்டப்பிரிவை இதச 279, 337, 338, 304(ஏ) மற்றும் பிரிவு 196, 181(3)MV Act ன் படி மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாற்றல் அறிக்கை செய்தேன். **(சட்டப்பிரிவு மாற்றல் அறிக்கை அ.சா.ஆ.16 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பின்னர் வழக்கு விசாரணை முடித்து எதிரி மீது இதச பிரிவு 279, 337, 338, 304(ஏ) மற்றும் பிரிவு 196, 181(3)MV Act ன் படி இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

1. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் கரூர்–திருச்சி தேசிய நெடுஞ்சாலை என்றால் சரிதான். தேசிய நெடுஞசாலை என்ற அடிப்படையில் வாகன போக்குவரத்து மிகுதியாக இருக்கும் என்றால் சரிதான். சம்பவ நடந்ததாக சொல்லப்படும் இடம் அரசுப்பள்ளியும், மாணவர் விடுதியும் உள்ளது என்றால் சரிதான். சம்பவ நடந்த நேரம் பகல் நேரம் என்பதால் மக்கள் நடமாட்டம் மிகதியாக இருந்தது என்றால் சரிதான் சம்பவ நேரம் மதியம் 03.30 மணி என்பதால் மற்ற பகல் நேரங்களைக்காட்டிலும் அந்த நேரம் குறைவான மக்கள் நடமாட்டம் இருந்தது.

2. வழக்ககிற்காக பொய்யாக சொல்கிறிர்கள் மக்கள் நடமாட்டம் மிகுதியாக தான் இருந்ததது என்றால் சரியல்ல. எனக்கு முன்பு புலன் விசாரணை செய்த அதிகாரிகளை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லைஎ ன்றால் சரிதான் உதவி ஆய்வாளரை மட்டும் விசாரணை செய்தேன். சம்பவத்தில் இறந்த நபர் வந்த வண்டியில் 4 நபர்கள் பயணித்தார்கள் என்றால் சரிதான். பொதுவாக இரண்டு நபர்களுக்கு மேல் பயணம் செய்யும் போது வாகனம் கட்டுப்பாட்டில் இருக்காது என்றால் சரிதான் ஒட்டுபவரின் திறனை பொறுத்து உள்ளது.

3. இருசக்கர வாகனம் வடிவமைக்கும் போது இரு நபர்கள் செல்லத்தான் வடிவமைப்பார்கள் என்றால் சரிதான். சம்பவ இடம் அரசுபள்ளி மற்றும் அரசு விடுதி இருந்ததால் வண்டியை மெதுவாகத்தான் இயக்கினார் என்றால் சரியல்ல. விபத்தில் இறந்தவர் வாகனத்தின் கட்டுப்பாட்டை இழந்து எதிரியின் வாகனத்தின் மோதி விபத்தை ஏற்படுத்தியதால் தான் எதிரி வாகனத்தின் இடதுபுறம் சேதாரம் ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

4. சம்பவயிட சாட்சிகள் யாரையும் சாட்சிகளாக போடாமல் இறந்து போன நபரின் ஊரைச்சேர்ந்தவர்களை சாட்சிகளாக போட்டுள்ளேன் என்றால் சரிதான் ஏற்கனவே விசாரணை செய்த விசாரணை அலுவலர்கள் சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சிகளை விசாரணை செய்து நானும் விசாரணை செய்து போதுமான இருந்ததால் நான் வேறு சாட்சிகளை விசாரிக்கவில்லை.

5. சம்பவ இடத்தை 10 க்கும் மேற்பட்ட சாட்சிகளை விசாரணை செய்தால் அரசுதரப்புக்கு விரோதமாக இருக்கும் என்பதால் விசாரிக்காமல் தவிர்த்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. கணணுற்ற சாட்சிகள் வந்த வாகனத்தில் விவரம் மற்றும் பதிவு எண் இறுதி அறிக்கையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல வாகனத்தின் வகை குறிப்பிடப்பட்டுள்ளது. வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்ன வகை பதிவு எண்ணை குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல.

6. பட்டியல் சாட்சி 1 க்கு நாங்களாக புகார் எழுதி நாங்களே கையொப்பம் வாங்கி வழக்கு தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. விபத்தில் இறந்து போனவரின் ஒரு மகனும், மனைவியும் பின்னால் அமர்ந்திருத்தால் விபத்தை நேரிடையாக பார்க்கமுடியவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கில் கண்ணுற்ற சாட்சிகள் யாரும் இல்லை என்பதால் வழக்கிற்காக தாங்களாகவே தயார் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல.

7. நான் சரிவர புலன் விசாரணை செய்திருந்தால பள்ளி மற்றும் விடுதி காப்பளார், ஆசிரியர்கள் ஆகியோர்களை சாட்சியாக காண்பித்து இறுதி அறிக்கை தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. சம்பவ இடத்திற்க நான் நேரிடையாக செல்லவில்லை என்றால் சரியல்ல. இறந்து போனவரின் உறவினர்களை காவல் நிலையத்திற்கு வரவழைத்து பொய்யாக வழக்கு தயார் செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சொன்ன நேரத்தில் சொன்ன

இடத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. இழப்பீடு பெறுவதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை : இல்லை**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

RAMAIYAH BAGYARAJ

Digitally signed by RAMAIYAH BAGYARAJ
DN: cn=RAMAIYAH BAGYARAJ, ou=MADURAI, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.02.26 13:17:04 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணராயபுரம்.